வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

நாள்: 15.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

நாட்டின் 78 ஆவது சுதந்திர தினம் இன்று உற்சாகமாக கொண்டாடப்பட்டது.

நாட்டை வலிமையாக்கும் நோக்கில் கொள்கைகளும், சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் உலக தமிழ் மாநாட்டை சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

3 நாட்கள் நடைபெற உள்ள, புதுச்சேரி கலைவிழா 2024, ஐ துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று மாலை தொடங்கி வைக்கிறார்.

புதுச்சேரியில், மகான் அரவிந்தரின் 152 ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது.

நாடு சுதந்திரம் (13)

நாட்டின் 78 ஆவது சுதந்திர தினம் இன்று கோலகலமாகவும், உற்சாகத்துடனும் கொண்டாடப்பட்டது. புதுடெல்லியில் வரலாற்று சிறப்பு மிக்க செங்கோட்டையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். 21 குண்டுகள் முழங்க இந்திய விமானப் படையின் அதி நவீன இலகுரக 2 ஹெலிகாப்டர்கள் வானில் ஒன்றன்பின் ஒன்றாக பறந்து தேசிய கொடி மீது மலர்களை தூவின. முன்னதாக முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் திரு நரேந்திர மோடி ஏற்றுக் கொண்டார். இவ்விழாவில், மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு ராஜ்நாத் சிங், திரு ஜே பி நட்டா உள்ளிட்ட பல தலைவர்கள் மற்றும் விருந்தினர்கள் கலந்து கொண்டனர். மேலும், 2 ஆயிரம் மாணவர்களும், 500 நாட்டு நலப் பணித்திட்ட தன்னார்வலர்களும் பங்கேற்றனர். பல்வேறு பகுதிகளில் இருந்து சிறப்பு அழைப்பாளர்களாக 6 ஆயிரம் பேர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

மோடி-உரை 1 (19)

நாட்டை வலிமையாக்கும் நோக்கில் கொள்கைகளும், சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சுதந்திர தினத்தை ஒட்டி பிரதமர் ஆற்றிய உரையில், 1857 சுதந்திர போருக்கு முன்பே நாட்டின் பல்வேறு பகுதிகளில்

பழங்குடியின மக்கள் சுதந்திரத்திற்காக போராடியதாக பிரதமர் தெரிவித்தார். தற்போது பாதுகாப்புத் துறையில் நாடு சுய சார்பு நிலையை அடைந்து வருவதாக தெரிவித்த அவர், பல்வேறு துறைகளில் முதலீடு செய்ய, பல்வேறு நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும் பிரதமர் கூறினார். 2047 ல் உலகின் உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார். வளர்ச்சி அடைந்த பாரதம் என்பது வெறும் வெற்று முழக்கம் அல்ல, 140 கோடி மக்களின் கனவு என குறிப்பிட்ட பிரதமர், வளர்ச்சி அடைந்த பாரதத்திற்காக நாட்டு மக்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திறனுள்ள இளைஞர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 2 கோடி 5 லட்சம் குடும்பங்களுக்கு புதிதாக மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளததையும் குறிப்பிட்ட அவர், மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கை காரணமாக மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகளுக்கு எளிதில் வங்கி கடன் கிடைப்பதாக

மோடி உரை 2 (15)

கூறினார். சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்கு 9 லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், மாற்றங்கள் அரசியலுக்கானவை அல்ல என்றும், நாட்டின் முன்னேற்றத்திற்காகவெ என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். விண்வெளி துறையில்

மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாக அதிக அளவிலான செயற்கை கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டு வருவதாக கூறிய பிரதமர், முன் எப்போதும் இல்லாத வகையில் வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சியின் புதிய உச்சத்தை தொட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். புதிய தேசிய கல்விக் கொள்கையில் தாய் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டதை சுட்டிக்காட்டிய அவர், நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவ படிப்பிற்கான இடங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும், இது மேலும் அதிகரிக்கப்படும் என்று உறுதி அளித்தார். ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டு பிடிப்புகளுக்காக பட்ஜெட்டில் 1 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் பிரதமர் திரு நரேந்திர மோடி சுட்டிக் காட்டினார்.

MS|AM|15.08.2024 (NSD)

*குடியரசு துணைத் தலைவர் (7)*

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெலங்கானா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு நாளை முதல் 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். முதற் கட்டமாக நாளை ஐதராபாத்தில் செல்லும் அவர்அங்குள்ள கன்ஹா சாந்தி வனத்தை பார்வையிடுகிறார். இதனை தொடர்ந்து ஆந்திராவில் உள்ள ஸ்வர்ணபாரத் அறக்கட்டளையின் 23 ஆவது ஆண்டு விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்கிறார். அதனை

தொடர்ந்து, அக்ஷரா வித்யாலயா வளாகம், திறன் மேம்பாட்டு மையம் மற்றும் முப்பவரபு அறக்கட்டளையையும் திரு ஜக்திப் தன்கர் பார்வையிட உள்ளார்.

MS|AM|15.08.2024 (NP)

*ஆளுநர்* (6)

78 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களை ஒட்டி, புதுச்சேரி ஆளுநர் மாளிகையில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவலர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இவ்விழாவில், துணை நிலை ஆளுநரின் செயலர் திரு நெடுஞ்செழியன், ஆளுநர் மாளிகை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

MS|AM|15.08.2024 (PTC)

*புதுச்சேரி சுதந்திர தினம்* 1(18)

புதுச்சேரியில் உலக தமிழ் மாநாட்டை சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சுதந்திர தின உரையில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார். நாட்டின் 78 ஆவது சுதந்திர தின விழா, புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி திடலில் நடைபெற்றது. இதில் கலந்து

கொண்ட முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்து, பல்வேறு காவல் படை பிரிவினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இதனை தொடர்ந்து சிறப்பாக பணியாற்றிய காவல் துறையினருக்கு விருதுகள் மற்றும் பதங்கங்களை வழங்கினார். விழாவில் உரையாற்றிய முதலமைச்சர், புதுச்சேரி மாநிலத்தில் தற்போது மருத்துவ படிப்பு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 880 ஆக உயர்ந்துள்ளதாகவும், மருத்துவ உயர் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 473 ஆக உயர்ந்துள்ளதையும் குறிப்பிட்டு பேசினார். புதுச்சேரி அரசு பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம் மாணவர்களுக்கு கிடைத்த மாபெரும் வாய்ப்பு என கூறினார். வரும் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், நீட் தேர்வில் தகுதி பெற, 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்த

*புதுச்சேரி சுதந்திர தினம் 2 (10)*

திட்டமிடப்பட்டு இருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார். விடுபட்ட ஆண்டுகளுக்கான தமிழ் மாமணி, தெலுங்கு ரத்னா, மலையாள ரத்னா விருதுகள் விரைவில் வழங்கப்பட உள்ளதாகவும், கலை மற்றும் பண்பாட்டுத் துறை, புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி

நிறுவனம் உள்ளிட்டவற்றில் காலியாக உள்ள பணியிடங்கள் விரைவில் நிரப்பப் படும் என்றார். புதுச்சேரி அரிக்கன்மேட்டில் இந்திய தொல்லியல் துறையின் உதவியுடன், ரோமன் சரக்கு கப்பல் மாதிரி வடிவில் விளக்க வழிகாட்டி மையம் அமைக்கப் படும் எனவும் தமது உரையில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இவ்விழாவில், சட்டப் பேரவை தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் பேரவை உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

MS|AM|15.08.2024 (PTC)

*ஏனாம்* (12)

இதேபோல், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் ஏனாம் பிராந்தியத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இவ்விழாவில், புதுச்சேரிக்கான டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணாராவ், சட்டமன்ற உறுப்பினர் திரு கொல்லப்பள்ளி ஸ்ரீனிவாச அசோக், மண்டல நிர்வாகி திரு முனுசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் உரையாற்றிய அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், ONGC நிறுவனம் மூலம் வழங்கப்படும் மீனவர்களுக்கான

இழப்பீட்டு தொகையின் 2 ஆவது தவணை 1 மாதத்திற்குள் வழங்கப்படும் எனவும், 135 கோடி ரூபாய் செலவில், ஏனாமில் வெள்ளத் தடுப்பு பணிகள் மேற்கொள்ள மத்திய அரசிடம் அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

MS|AM|15.08.2024 (PTC)

என்எல்சி (10)

நெய்வேலியில் உள்ள என்எல்சி நிறுவனம் சார்பில் பாரதி விளையாட்டு அரங்கில் சுதந்திர தின விழா இன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. நகர நிர்வாக அலுவலகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு என்எல்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலான் இயக்குநர் திரு பிரசன்ன குமார் மோட்டுபள்ளி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து, விளையாட்டு அரங்கில் தேசிய கொடி ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இவ்விழாவில், அந்நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விருதுகள் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளி குழந்தைகள் மற்றும்

மத்திய தொழிலக பாதுகாப்பு படை பிரிவினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

MS|AM|15.08.2024 (PTC)

*கலைவிழா* (15)

புதுச்சேரி அரசின் கலை பண்பாட்டுத் துறை, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் இணைந்து நடத்தும் புதுச்சேரி கலைவிழா 2024, இன்று தொடங்கி 17 ம் தேதி வரை நடைபெறுகிறது. புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி திடலில், மாலை நடைபெற உள்ள விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலை நிகழ்ச்சிகளை தொடக்கி வைக்க உள்ளார். இவ்விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள், சட்டபேரவை உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்த கலைவிழா புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி திடல், கருவடிக்குப்பம் காமராஜர் மணிமண்டபம், செட்டிப்பட்டு திரவுபதியம்மன் கோவில் திடல், தொண்டமாநத்தம் சமுதாய நலக் கூடம், கரிக்கலாம்பாக்கம் அரசு கலையரங்கம் உள்ளிட்ட 5 இடங்களில் நடைபெற உள்ளது. கலைவிழாவில், அசாம், மகராஷ்டிரா, கேரளம், கர்நாடகா, ராஜஸ்தான் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 250 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர்.

MS|AM|15.08.2024 (PTC)

அரவிந்தர் (7)

சிறந்த தத்துவஞானி, சிந்தனையாளர் மற்றும் ஆன்மீக தலைவருமான மகான் அரவிந்தரின் 152 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதளப் பதிவின் புகழாரம் சூட்டி உள்ளார்.

இந்நாளை ஒட்டி, புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்திற்கு பல்வேறு மாநிலங்களை சேர்ந்தவர்கள் அரவிந்தர் மற்றும் அன்னை பயன்படுத்திய அறையை பார்வையிட்டு, அவரது சமாதியில் தியானத்தில் ஈடுபட்டனர்.

MS|AM|15.08.2024 (Np)

விளையாட்டு (7)

டொம்னிக்கன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, பிரேசிலின் பெர்ணாண்டோ இணை காலிறுதிக்கு முன்னேறி உள்ளது. இன்று நடைபெறுவதாக இருந்த காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்த இணையை எதிர்த்து விளையாட இருந்த கஜகஸ்தானின் dimi try popco- அர்ஜெண்டினாவின் camilo ugo இணை ஆட்டத்தில் இருந்து வெளியேறியதை அடுத்து இந்த இணை காலிறுதிக்கு தகுதி பெற்றள்ளது.

இந்திய ஹாக்கி வீரர் ஸ்ரீஜேஷ் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளதை அடுத்து, அவர் அணிந்த எண் 16 ஜெர்சி வேறு வீரர்களுக்கு ஒதுக்கப்பட மாட்டாது என ஹாக்கி சம்மேளனம் தெரிவித்துள்ளது. மேலும், ஜீனியர் ஹாக்கி அணியின் பயிற்சியாளராக ஸ்ரீஜேஷை நியமிக்கவும் ஹாக்கி சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டின் 78 ஆவது சுதந்திர தினம் இன்று உற்சாகமாக கொண்டாடப்பபட்டது.

நாட்டை வலிமையாக்கும் நோக்கில் கொள்கைகளும், சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் உலக தமிழ் மாநாட்டை சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

3 நாட்கள் நடைபெற உள்ள, புதுச்சேரி கலைவிழா 2024, ஐ துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று மாலை தொடங்கி வைக்கிறார்.

புதுச்சேரியில், மகான் அரவிந்தரின் 152 ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது.